# காமராஜரின் பன்முக ஆளுமை




பதிப்பாசிரியர்

முனைவர் கா.ஸ்ரீதர்



வி.இ.நா. செந்திக்குமார நாடார் கல்லூரி (தன்னாட்சி)

(தேசிய தர மதிப்பீட்டில் 'A' தரம் பெற்றது)

விருதுநகர்

## நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | காமராஜரின் பன்முக ஆளுமை |
| முதற்பதிப்பு | : | ஜீலை - 2018 |
| பதிப்பு & வெளியீடு | : | வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூ<br>(தன்னாட்சி) |
| மின்னஞ்சல் | : | support@vhnsnc.edu.in |
| வலைதளம் | : | www.vhnsnc.edu.in |
| ISBN No | : | 978-93-81723-87-6 |
| புத்தக அளவு | : | 1 x 4 |
| பக்கங்கள் | : | 409 |
| விலை | : | ரூ. 250 |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் கா.ஸ்ரீதர்<br>வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூ<br>(தன்னாட்சி) |
| அச்சிட்டோர் | : | முத்து பிரிண்டர்ஸ், விருதுநகர் |


(இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைக் கருத்துகளுக்கு அந்தந்தக் கட்டுரையாளர்களே முழுப்பொறுப்பாளர்கள்)

| வரிசை எண் | பெயர் மற்றும் கல்லூரி | பக்கம் எண் |
|---|---|---|
| I | கு.தங்கமணி,<br>கருப்பண்ணன் மாரியப்பன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி | 1 |
| II | ச.உஷா,<br>பாத்திமா கல்லூரி. | 4 |
| III | ச.மோனிஷா,<br>எஸ்.எஃப்.ஆர். மகளிர் கல்லூரி | 6 |
| I | கோ.ஸ்ரீநந்தினி<br>வி.இ.நா.செ.நா. கல்லூரி | 8 |
| II | க.நித்யா<br>வி.இ.நா.செ.நா. கல்லூரி | 10 |
| III | மு.அசோக்<br>வி.இ.நா.செ.நா. கல்லூரி | 12 |
| I | மு.ஆர்த்தி<br>ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி | 14 |
| II | அ.கல்பனா<br>கம்பன் கலை & அறிவியல் மகளிர் கல்லூரி | 19 |
| III | சந்தியா<br>இதயா மகளிர் கல்லூரி | 22 |
| I | ஜெ.ஹேமா பிரியதர்ஷினி<br>வி.இ.நா.செ.நா. கல்லூரி | 26 |
| II | ரா. ஷீபா மெர்ஸி<br>வி.இ.நா.செ.நா. கல்லூரி | 30 |
| III | சு.கீர்த்தனா<br>வி.இ.நா.செ.நா. கல்லூரி | 34 |
| I | இரா.ஏஞ்சல்<br>பாத்திமா கல்லூரி | 37 |
| II | செ.கௌசல்யா<br>வி.எஸ்.பி. பொறியியல் கல்லூரி | 46 |
| III | செ.ராஜஜீவ்காந்தி<br>வி.இ.நா.செ.நா.கல்லூரி | 52 |

# I - இலக்கிய நாயகர் காமராசர்

முனைவர் இரா.ஏஞ்சல்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி,
மதுரை.

இலக்கியம் என்னும் சொல்லானது இலக்கு + இயம் எனப் பிரித்து நோக்கப்படுகிறது. வாழ்வின் இலக்கினைப் பற்றி இயம்புவதாக உள்ளது. இவ்வாறாகக் காலத்தைக் காட்டும் கண்ணாடி இலக்கியமாயின், இலக்கியங்களின் கதாநாயகர்களாகச் சுட்டப்படுபவர்கள் அந்தந்தக் காலக்கட்டங்களில் வாழ்ந்த ஆளுமைகளே அப்படியாகக் கடந்த நூற்றாண்டில் நம்மைக் கடந்து சென்ற ஆளுமைகளுள் முக்கிய இடம் பிடிப்பவர் காமராசர்.

இலக்கியத்தைக் காலவரிசையில் கண்ணோக்கினால் சங்ககாலம் முதல் தற்காலம் வரை பல நிலைகளை உள்ளடக்கியதாய் உள்ளது. இவ் இலக்கியங்கள் சுட்டும் பல்வேறு கருத்தாக்கங்களில் இடம் பெற்றுள்ள வாக்குகளை வாழ்வாக்கி வாழ்ந்த தன்னேரில்லாத் தலைவனாம் காமராசரின் பண்புகளும், இலக்கியங்களில் இடம்பெறும் வரிகளுக்குச் சொந்தக்காரராக அவர் வாழ்ந்த, செய்த செயல்களின் தடயங்களும் இன்று தடம் பதித்து அவரைத் தன்னேரில்லா ஆளுமையாக உருவாக்கியுள்ள தன்மையும் குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**காப்பிய நாயகன்**

இலக்கியமானது காப்பியத்திற்கான இலக்கணத்தை,

**"பெருங்காப்பிய நிலை பேசுங்காலை**
**வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றினொன்று**
**ஏற்புடைத்தாகி முன்வர இயன்று**
**நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்**
**தன்னிகர் இல்லாத் தலைவனை உடைத்தாய்**
**மலை கடல் நாடு வளநகர் பருவம்**
**இருசுடர் தோற்றமென் றினையன புனைந்து '..**
**கற்றோர் புனையும் பெற்றிய தென்ப."** **(தண்டியலங்காரம்)**

என இவ்வாறு வகுக்கிறது. காப்பிய இலக்கணம் குறிப்பிடும் தன்னேரில்லாத் தலைவனாக, காட்சிக்கு எளியனாக, கடுஞ்சொல் அல்லானாக வாழ்ந்தவர் காமராசர். மணம் முடித்தால் ஒருவேளை பாரதிதாசன் குறிப்பிடுவது போல,